# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 584** **நாள்: 12.12.2016**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பொதுமக்களுக்கு வேண்டுகோள்

"வர்தா" புயல் காரணமாக அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் வரை சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் சமீபத்திய தகவலில் இன்று மாலை 4.00 மணி முதல் 7.00 மணி வரை பலத்த காற்று வீசும் என்றும், கனமழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள காரணத்தினால், பொதுமக்கள் யாரும் தங்களது வீடுகளை விட்டு மாலை 4.00 மணி முதல் 7.00 மணி வரை வெளியே செல்ல வேண்டாம் எனவும் மீண்டும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் வரை பாதுகாப்பான இடத்தில் இருக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், இன்று மாலை 7.00 மணிக்கு பின்னரும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள காரணத்தினால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருந்திட கேட்டுக் கொண்டுள்ளார்.

"வர்தா" புயலினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை உடனுக்குடன் சீர் செய்ய வேண்டும் என அமைச்சர் பெருமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகிறது.

பொதுமக்கள் தங்களது பகுதியில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால், தங்களது பகுதி மின்சார வாரிய அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறும், மேலும் குடிநீர் பெறுவதினில் சிரமங்கள் ஏதுமிருப்பின், சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொது மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு காவல் துறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். எனவே, குழந்தைகள் மற்றும் முதியோர் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் பாதுகாப்பாக இருக்குமாறும், இரு சக்கர வாகனங்களையோ, நான்கு சக்கர வாகனங்களையோ பயன்படுத்த வேண்டாம் என்றும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**